172708

# கீழையூர் தலவரலாறு

Q23:38-2 1193 KL
N44
172708

[illegible]

# தல வரலாறு.

குருக்கை, உ. குமாரசாமி பிள்ளை எழுதியது

21 JUN 1944
ADRA



[illegible] சுவாமி தேவஸ்தான வெளியீடு.

1944.

Q23:38.21193KL
N44
172708

# முகவுரை.

ஒவ்வொரு தலத்துக்கும் இத்தகைய நூலொன்றிருப்பின், யாத்திரிகர்களும், பிறரும் தல வரலாறுகளை எளிதில் அறிந்துகொள்ளக் கூடுமென்பதை நன்குணர்ந்த அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தாரின் சுற்றறிக்கையின் பயனாக இச்சிறு நூல் எழுதப்பெற்றது.

இந் நூல் எழுதுவதற்கு காரணஸ்தர்களாக விளங்கும் அறநிலையப் பாதுகாப்புக்கழகத் தலைவர் திவான் பகதூர் T. M. நாராயணசாமி பிள்ளை, B. A., B. L., அவர்களுக்கும், கமிஷனர் ராவ்பகதூர் C. M. இராமச்சந்திரஞ் செட்டியார், B. A., B. L., F. R. C. S. அவர்களுக்கும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

17278

# கீழையூர் தல வரலாறு.

சோழவள நாட்டிலே, தஞ்சை ஜில்லா நாகப்பட்டணம் தாலூகாவிலே, காயேசுவரம் என்னும் கடற்கரைக்கு மேற்கே ஆறு மைல் தூரத்தில் விளங்குவது கீழையூர் என்னும் தலம்.

இத்தலத்துக்கு மேற்கே மூன்று மைல் தூரத்தில் எட்டுகுடி என்னும் சுப்பிரமணியத் தலமும், திருக்குவளை என வழங்கும் கோளிலி என்ற பாடல் பெற்ற தலமும், தென் மேற்கில் மூன்று மைல் தூரத்தில் திருவாய்மூர் என்னும் பாடல்சான்ற பழம்பதியும விளங்குகின்றது. இவ்வூருக்குத் தெற்கில் மூன்றுமைல் தூரத்தில் அரிச்சந்திர நதி என்னும் ஆறும், வடக்கே ஒரு மைல் தூரத்தில் சந்திர நதி என்னும் ஆறும் ஓடுகிறது. இததலம் நாகை திருத்துறைப்பூண்டி கப்பி ரஸ்தாவில் நாகையிலிருந்து 14-வது மைலிலும் திருத்துறைப்பூண்டியிலிருந்து 11-வது மைலிலும் உள்ளது. மோட்டார் பஸ் ஓடுகிறது. இருப்புப்பாதை வழியாக வந்தால், மாயவரம் அறந்தாங்கிப் பாதையில் திருநெல்லிக்காவல் ரயில்வே ஸ்டேஷனிலிறங்கி கிழக்கே எட்டு மைல தூரம் வர வேண்டும்.

இவ்வூர் பெரிய கிராமம். சுமார் 1800 ஜனத்தொகை கொண்டது. ஒன்பது பெயர்கள் கொண்ட பஞ்சாயித்து சபையாரால் கிராமப் பொதுக் காரியங்கள் கவனிக்கப்படுகின்றன. இங்கே வெளிக்காவல நிலையம் (Out Police Station) இருக்கிறது. ஜில்லா போர்டாரின் ஆளுகைக்குட்பட்ட ஆரம்பப் பாடசாலையொன்றும் கிராம வைத்தியசாலை (Rural Dispensary) யொன்றும் இருக்கிறது. பொது மக்களுக்குச் சௌகரியமாய் கூட்டுறவு நாணயச் சங்கமும் இருக்கிறது. இவ்வூரில் திங்கட்கிழமைதோறும் சந்தை கூடுகிறது. இதில் சகல சாமான்களும் விற்பனைக்கு வரும்.



மானது, முல்லை நிலத்திலுள்ள முல்லை, மல்லிகை, வனமல்லிகை ஆகியகொடிகள் ஒன்றோடொன்று பின்னிக் கொண்டிருக்க, கல்லினால் அமைக்கப்பட்ட மதிலின் மீது மேகங்கள் வந்து தங்கியிருக்கின்ற திருக்கண்ணார் கோயிலாகும்.

தருவளர் கானந் தங்கிய துங்கப் பெருவேழ
மருவளர் கோதை அஞ்ச உரித்து மறைநால்வர்க்
குருவளர் ஆல நீழ லமர்ந்தீங் குரைசெய்தார்
கருவளர் கண்ணார் கோயி லடைந்தோர் கற்றோரே. (௪)

(பொ—ரை.) மரங்கள் வளர்ந்துள்ள காட்டினிடத்துவசிக்கும் பெருமை பொருந்திய பெரிய யானையை வாசனை நிறைந்த மலர்களை அணிந்த கூந்தலையுடைய உமாதேவியார் பயப்படும்படியாக உரித்து வேதத்தினைச் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் ஆகிய நால்வர்க்கும் நிறம் பொருந்திய கல்லால விருக்ஷத்தின் நிழலில்அமர்ந்து, அறத்தினை உபதேசித்தவராகிய சிவபெருமான் எழுந்தருளியுள்ள காரணப் பொருள்கள் பிறத்தற் கிடமாகிய திருக் கண்ணார் கோயிலை அடைந்தவர் கற்றோர் ஆவர்.

மறுமா ணுருவாய் மற்றிணை யின்றி வானோரைச்
செறுமா வலிபாற் சென்றுல கெல்லா மளவிட்ட
*குறுமா ணுருவன் றற்குறி யாகக் கொண்டாடுங்
*கறுமா கண்டன் மேயது கண்ணார் கோயிலே. (௫)

(பொ—ரை.) மாட்சிமைப்பட்ட உருவத்தோடு தனக்கு ஒருவர் நேரின்றித் தேவர்களை வருத்திய மஹாபலிச் சக்கரவர்த்தியினிடம் சென்று மூன்றடி மண்ணைக் கேட்டு உலகத்தையெல்லாம் அளந்த குறுகிய பிரமசாரியாக விளங்கிய வாமனமூர்த்தி சிவலிங்கத்தைத்தாபித்துப் பூசித்துப் போற்றும்படியான கறுத்த விஷம் பொருந்திய கண்டத்தையுடைய சிவபெருமான் எழுந்தருளியுள்ள தலமானது திருக்கண்ணார் கோயிலாகும்.

விண்ணவ ருக்கா வேலையு ளஞ்சம் விருப்பாக
உண்ணவ னைத்தே வர்க்கமு தீந்தெவ் வுலகிற்கும்
கண்ணவ னைக்கண் ணார்திகழ் கோயிற் கனிதன்னை
நண்ணவல் லோர்கட் கில்லை நமன்பால் நடலையே. (௬)

(பொ—ரை.) தேவர்களுக்காகத் திருப்பாற் கடலுள் தோன்றிய ஆலகால விஷத்தை விருப்புடன் அருந்தியவனை, அமரர்

---

*குரு, கரு, என்றும் பாடம் உண்டு.

கட்கு அமுதத்தை அளித்து எல்லா உலகத்திற்குங் கண்போன்று இருப்பவனை, கண்கள் நிறைந்து விளங்கும் திருக்கண்ணார்கோயில் என்னும் ஆலயத்தினுள் தோன்றும் கனியைப் பொருந்த வல்லவர்கட்கு இயமனிடத்திருந்து உண்டாகும் துன்பங்கள் யாவும் இல்லா தொழியும்.

முன்னொரு காலத் திந்திர னுற்ற முனிசாபம்
பின்னொரு நாளவ் விண்ணவ ரேத்தப் பெயர்வெய்தித்
தன்னரு ளாற்கண் ணாயிர மீந்தோன் சார்வென்பர்
கன்னியர் நாளுந் துன்னமர் கண்ணார் கோயிலே. (எ)

(பொ—ரை.) முன்னொருகாலத்தில் இந்திரன் அடைந்த கௌதமமுனிவரின் சாபத்தைப் பின்னொரு நாளில் தேவர்களெல்லாம் துதித்த காலையில் நீக்கித் தனது அருளால் கண்களைக் கொடுத்த சிவபெருமானது இடம் இளங்கன்னியர்கள் யாவரும் தினமும் நெருங்கி விளையாடிக்கொண்டு வசிக்கும்படியான திருக்கண்ணார் கோயில் என்று சொல்லுவர் (பெரியோர்.)

பெருக்கெண் ணாத பேதை அரக்கன் வரைக்கீழா
னெருக்குண் ணாத்தன் னீள்கழல் நெஞ்சில் நினைந்தேத்த
முருக்குண் ணாதோர் மொய்கதிர் வாள்தேர் முன்னீந்த
திருக்கண் ணாரென் பார்சிவ லோகஞ் சேர்வாரே. (அ)

(பொ—ரை.) பெருமையைக் கருதாத அறியாமைத் தன்மை பொருந்திய இராவணன் என்பான் கைலாய மலையின் கீழாக இருந்து பரமன் பெருவிரலால் நெருக்குண்டு பின்னர்த் தமது நீண்ட பாதங்களை மனதினிடத்துக் கொண்டு துதிக்க உடனே தோல்வியடையாததாகிய ஒப்பற்ற நிறைந்த பிரகாசம் பொருந்திய வாளாயுதத்தையும், இரதத்தையும் கொடுத்தருளிய திருக்கண்ணாயிரேசுவரர் என்று சொல்பவர்கள் சிவலோகத்தை அடைவார்கள்.

செங்கம லப்போ திற்றிகழ் செல்வன் றிருமாலு
மங்கம லக்கண் நோக்கரும் வண்ணத் தழலானன்
கங்கம லக்கண் ணார்திகழ் கோயில் தமதுள்ளத்
தங்கம லத்தோ டேத்திட வண்டத் தமர்வாரே. (கூ)

(பொ-ரை.) செந்தாமரைப்புஷ்பத்தினிடத்துவிளங்கும் பிரமதேவரும், திருமாலும், மாறுபட்ட அவர்களின் ஊனக்கண்களால்



நோக்குதற்கு முடியாதவாறு அக்கினிப் பிழம்பாகி நின்றோரும் நிர்மலமுடையோரும் ஆகிய கண்ணாயிரேசுவரர் எழுந்தருளியுள்ள திருக் கண்ணார்கோயிலைத் தமது இருதயகமலத்தில் வைத்துத் தியானிப்பதால் (அன்பர்கள்) தேவருலகத்தில் வசிப்பார்கள்.

தாறிடு பெண்ணைத் தட்டுடை யாருந் தாமுண்ணுஞ்
சோறுடை யார்சொற் றேறன்மின் வெண்ணூல் சேர்மார்பன்
ஏறுடை யான்பர னென்பணி வானீள் சடைமேலோர்
ஆறுடை அண்ணல் சேர்வது கண்ணார் கோயிலே. (கo)

(பொ—ரை.) தாற்றினையுடைய பனையாற் செய்யப்பட்ட தட்டாடையைத் தரித்த பௌத்தரும், பகற்பொழுதிலேயே சோற்றினை உண்பவராகிய சமணரும் சொல்லும் சொற்களை உண்மையென்று தெளியாதீர்கள். வெண்மையான முப்புரிநூல் பொருந்திய மார்பையுடையவரும், இடபவாகனத்தை உடையவரும், பரம்பொருளானவரும், எலும்பை ஆபரணமாகப் பூண்டவரும், நீண்ட சடாபாரத்தின்மேல் கங்கையைத் தரித்தவரும், பெருமையிற் சிறந்தவரும் ஆகிய கண்ணாயிரேசுவரர் பொருந்தி வாழ்வது திருக்கண்ணார் கோயிலே ஆகும்.

காமரு கண்ணார் கோயிலு ளானைக் கடல்சூழ்ந்த
பூமரு சோலைப் பொன்னியன் மாடப் புகலிக்கோ
னாமரு தொன்மைத் தன்மையுள் ஞான சம்பந்தன்
பாமரு பாடல் பத்தும்வல் லார்மேற் பழிபோமே. (கக)

(பொ—ரை.) அழகிய திருக்கண்ணார் கோயிலில் எழுந்தருளியுள்ள கண்ணாயிரேசுவரரைக் கடல் சூழ்ந்த பூக்கள் பொருந்திய சோலைகளும், பொன்னாற் செய்தொளிரும் மாடமாளிகைகளும் நிறைந்துள்ள சீகாழிப்பதிக்குத் தலைவர் ஆகிய, நாவினிடத்துப் பொருந்திய பழைமையான பாக்களைப் பாடுந்தன்மைவாய்ந்த திருஞானசம்பந்தப்பிள்ளையார் அருளிச் செய்த பாவாகப் பொருந்திய திருப்பாடல்கள் பத்தையும் ஓதவல்லவர்மேலுள்ள பழிகள் யாவும் விட்டு விலகும். (பேரானந்தம் விளையும்.)

திருச்சிற்றம்பலம்.

023'38:2N72KV
475
172313

• உ

சிவமயம்.

# அப்பர் சுவாமிகள் பதிகம்.

திரு அடைவு திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

... ... ... ... ... ...

நற்கொடிமேல் விடையுயர்த்த நம்பன் செம்பங்குடி
நல்லக்குடி. நளி நாட்டியத் தான்குடி
கற்குடி தென்களக்குடி செங்காட்டங்குடி கருந்திட்டைக்குடி
கடையக்குடி காஞூங்கால்
விற்குடி வேள்விக்குடி நல்வேட்டக்குடி வேதிகுடி
மாணிக்குடி விடைவாய்க்குடி
புற்குடி மாகுடி. தேவன்குடி. நீலக்குடி
புதுக்குடியும் போற்றவிடர் போகுமன்றே (௬)

... ... ... ... ... ...

திருச்சிற்றம்பலம்.



BY THE REGISTRAR OF ... 21 JUN 1944 MADRAS

## வரவு செலவு.

ஆண்டு 1-க்கு வரும்படி ஏறக்குறைய 3000. செலவு ஏறக்குறைய ரூ. 3000

வரவு விபரம்:- நஞ்சை நிலத்திலிருந்து மேல்வாரம் சுமார் ரூ. 1080. பண்ணைச் சாகுபடியிலிருந்து சுமார் ரூ. 930. மனைப் பகுதியில் 230. சந்தைக் குத்தகையிலிருந்து ரூ. 500. தோப்பாதாயம் ரூ. 260. சர்க்கார் மோஹினி வரவு 87-8-0. ஆக 3087-8-0.

செலவு விபரம்:- சிப்பந்திச்செலவு ரூ. 612-0-0. ஆராதனைச் செலவு ரூ 600-0-0. சர்க்கார் கிஸ்தி ரூ. 441—0—0. லைசென்ஸ் பீஸ் ரூ. 75—0—0. போர்டு சகாயத்தொகை வகையரா 72—0—0. தேசாந்திரிகளும் கல்வி சம்பந்தமான செலவுகளும் ரூ. 221—0—0. இதரச் செலவுகளில் சுமார் 1040. ஆக ரூ. 3061.

தாவர சொத்துக்கள்:- கீழையூர் கிராமத்திலும் மடப்புரம் கிராமத்திலுமாய் நஞ்சை ஏகர் 58 ஸெண்டு 11-ம் புஞ்சை ஏகர் 19 ஸெண்டு 45-ம் ஆக நஞ்சை புஞ்சை 77 ஏகர் 56 ஸெண்டு நிலமிருக்கிறது.

ஜங்கம சொத்துக்கள்:- திருவாபரணம் ஏறக்குறைய 102-8-0.
பாத்திர பண்டங்கள் ஏறக்குறைய 211-4-6.

நிர்வாகம்:- இக்கோயில் 1936 ௵ வரையில் நாகப்பட்டணம் தேவஸ்தானம் கமிட்டிக்குட்பட்டிருந்தது. அதன்பிறகு நிர்வாகம் சரிவர நடைபெறாத காரணத்தால் 1939-௵த்தில் இக்கோயிலையும், ஸ்ரீ அரங்கநாதப்பெருமாள் கோயிலையும் Notification செய்தார்கள். அதன்பேரில் திருவாய்மூர் தியாகராஜசுவாமி கோயில் இவ்வூர் அருணாசலேசுவரர் கோயில் அரங்கநாதப் பெருமாள் கோயில் ஆகிய மூன்று கோயிலுக்கும் சேர்த்து ஒரு நிர்வாக அதிகாரியின் மேற்பார்வையில் ஒப்புவிக்கப்பட்டிருந்தது. மூன்று கோயிலையும் சேர்த்து ஒரு நிர்வாக அதிகாரி நிர்வகிப்பதில் நிர்வாகம் சரிவர நடத்தமுடியாமல் பல தொந்தரவுகள் ஏற்பட்டதால் திருவாய்மூர் தியாகராச சுவாமி கோயிலுக்குத் தனியாகவும் அருணாசலேசுவரர் ஆலயத்துக்கும் அரங்கநாதப்பெருமாள் ஆலயத்துக்கும் சேர்த்து

ஒரு நிர்வாக அதிகாரி தனியாகவும் நியமித்தார்கள். அதன்பிறகு நிர்வாகம் செம்மையாய் நடைபெற்று வருகிறது. இப்பொழுது அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தாரின் (Religious Endowment Board) நேரான மேற்பார்வையிலிருந்து வருகிறது. இப்பொழுது இக் கோயிலுக்கு நிர்வாக அதிகாரியாயிருப்பவர் திரு. K. S. வைத்திலிங்க முதலியார் அவர்கள்.

திருப்பணி:— ஏற்கனவே 1941-௵த்தில் இக் கோயிலிலுள்ள விநாயகர், சுப்பிரமணியர், அம்பாள் ஆகிய ஆலயங்கள் மிகவும் பழுதுபட்டிருந்ததை இப் பொழுதிருக்கும் நிர்வாக அதிகாரி திரு. K. S. வைத்தி லிங்க முதலியாரின் பெருமுயற்சியின்பேரில் பல அன்பர் களது பொருளுதவிகொண்டும் கோயில் நிதியிலிருந் தும் திருப்பணிசெய்து கும்பாபிஷேகம் செய்விக்கப் பெற்றது. இப்பால் சிவகெங்கை என்னும் சந்நிதிக் குளத்திற்கு வடபுறமாய் திருநந்தவனம் போடப்பெற்று திருக்குளத்தை இலவசமாய் சுமார் 2500 ஆட்கள் சேர்த்து வெட்டும்படி செய்து நாற்கரையும் படித்துறைக் கட்டுகள் கட்டியும், நடவானம் செப்பனிடப்பெற்று இலவங்கன்றுகள் வைத்துப் பயிர் செய்தும் சிறப்புச் செய்திருக்கிறது. சிப்பந்திகளின் வீடுகள் பழுது பார்த்து கட்டிக்கொடுக்கப்பெற்றிருக்கிறது.

இப்பொழுது மிகவும் பழுதுபட்டிருந்த விமா னம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், சோபான மண்டபம், மடப்பள்ளி மதில், சண்டிகேசுரர் ஆலயம், யாகசாலை இவைகளைப் புதுக்கி திருப்பணி செய்து நாளது தாரண-௵ வைகாசி-௴ 26௳ கும்பாபிஷே கம் செய்ய நாள் குறிப்பிடப் பெற்றிருக்கிறது. இதற்காக ரூ. 6000 திட்டம் போடப்பெற்றிருக்கிறது. சுமார் ரூ. 2000 வரை நிதி சேகரித்தும் இக்காரியங் களை மிகுந்த பக்தி சிறத்தையுடனும் ஊக்கத்துடனும் நடத்திவரும் திரு. K. S. வைத்திலிங்க முதலியா ரவர்களுடைய அருஞ்செயல் பாராட்டற்குரியது.

கருணாநிதி பிரஸ், விஜயபுரம் 44